# Tnpsc Group 4 General Tamil Model Test - Part 2

More Pdf Link: https://wp.me/p7JanY-cpU

## 6th Tamil Unit 1 Questions

21. 'அமுதென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

A) அமுது + தென்று

**B) அமுது + என்று**

C) அமுது + ஒன்று

D) அமு + தென்ற

22. 'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

**A) செம்மை + பயிர்**

B) செம் + பயிர்

C) செமை + பயிர்

D) செம்பு + பயிர்

23. இன்பத்தமிழ் – பாடலின் கருத்தின்படி சரியானது எது?

I. விளைவுக்கு – நீர்

II. அறிவுக்கு – தோள்

III. இளமைக்கு – பால்

IV. புலவர்க்கு – வேல்

A) I, II மட்டும் சரி

B) III மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) IV மட்டும் சரி

24. கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி இளங் கோதையரே கும்மி கொட்டுங்கடி – நிலம் எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ் எட்டிடவே கும்மி கொட்டுங்கடி! – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

**A) பெருஞ்சித்திரனார்**

B) நாமக்கல் கவிஞர்

C) பாரதியார்

D) மீனாட்சி சுந்தரனார்

25. ஊழி பலநூறு கண்டதுவாம் அறிவு ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம் – பெரும் ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும் அழியாமலே நிலை நின்றதுவாம்! – என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) குயில்

**B) கனிச்சாறு**

C) கண்ணன் பாட்டு

D) தென்மொழி

26. பொய் அகற்றும் உள்ளப் பூட்டறுக்கும் – அன்பு பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும் – உயிர் மெய்புகட்டும் அறமேன்மை கிட்டும் இந்த மேதினி வாழ்வழி காட்டிருக்கும்! – என்ற பாடல்வரியின் ஆசிரியரின் இயற்பெயர் என்ன?

**A) பெருஞ்சித்திரனார் (மாணிக்கம்)**

B) பெருஞ்சித்திரனார் (ராஜதுரை)

C) பெருஞ்சித்திரனார் (பிச்சை முத்து)

D) பெருஞ்சித்திரனார் (ராஜ வர்மன்)

27. சொல்லும் பொருளும் – சரியானவற்றை தேர்ந்தெடு.

I. ஆழிப் பெருக்கு – கடல் கோள்

II. உள்ளப்பூட்டு – உள்ளத்தின் அறியாமை

III. மேதினி – உலகம்

IV. ஊழி – நீண்டதொரு காலப்பகுதி

A) I, II மட்டும் சரி

B) III மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) IV மட்டும் சரி

28. பல நூறு ஆண்டுகளைக் கண்டது தமிழ்மொழி. அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்ட மொழி. பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் ஆகிய எவற்றாலும் அழியாமல் நிலைத்திருக்கும் மொழி – என்று கூறியவர் யார்?

A) திரு.வி.க

B) அயோத்திதாச பண்டிதர்

**C) பெருஞ்சித்திரனார்**

D) கவிமணி

29. தமிழ், பொய்யை அகற்றும் மொழி; அது மனத்தின் அறியாமையை நீக்கும் மொழி; அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்த மொழி; உயிர் போன்ற உண்மையை ஊட்டும் மொழி ; உயர்ந்த அறத்தைத் தரும் மொழி. இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும் மொழி தமிழ்மொழி – என்று கூறியவர் யார்?

A) திரு.வி.க

B) அயோத்திதாச பண்டிதர்

C) கவிமணி

**D) பெருஞ்சித்திரனார்**

30. பாவலரேறு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர் யார்?

A) கோமல் சுவாமிநாதன்

B) திரு.வி.க

**C) பெருஞ்சித்திரனார்**

D) மீனாட்சி சுந்தரனார்

31. கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம் முதலான நூல்களின் ஆசிரியர் யார்?

A) கோமல் சுவாமிநாதன்

**B) பெருஞ்சித்திரனார்**

C) மீனாட்சி சுந்தரனார்

D) திரு.வி.க

32. தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களை நடத்தியவர் யார்?

**A) பெருஞ்சித்திரனார்**

B) கவிமணி

C) சுந்தரனார்

D) பாரதியார்

33. தனித்தமிழையும் தமிழுணர்வையும் பரப்பிய பாவலர் யார்?

A) கோமல் சுவாமிநாதன்

B) திரு.வி.க

C) மீனாட்சி சுந்தரனார்

**D) பெருஞ்சித்திரனார்**

34. கனிச்சாறு என்னும் நூல் ____________________ தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது.

A) 6

B) 7

**C) 8**

D) 9

35. வான்தோன்றி வளி தோன்றி நெருப்புத் தோன்றி மண் தோன்றி மழை தோன்றி மலைகள் தோன்றி ஊன் தோன்றி உயிர் தோன்றி உணர்வு தோன்றி – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) பாரதிதாசன்

B) கவிமணி

**C) வாணிதாசன்**

D) பாரதியார்

36. ஒளி தோன்றி ஒலி தோன்றி வாழ்ந்த அந்நாள், தேன் தோன்றியது போல மக்கள் நாவில் செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி! – என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?

A) உ.வே.சா

**B) வாணிதாசன்**

C) மீனாட்சி சுந்தரனார்

D) பாரதியார்

37. தாய் மொழியில் படித்தால் ______________ அடையலாம்.

A) பன்மை

**B) மேன்மை**

C) பொறுமை

D) சிறுமை



winmeen.com

38. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் __________________ சுருங்கிவிட்டது.

**A) மேதினி**

B) நிலா

C) வானம்

D) காற்று

39. 'செந்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________________.

A) செந் + தமிழ்

B) செம் + தமிழ்

C) சென்மை + தமிழ்

**D) செம்மை + தமிழ்**

40. 'பொய்யகற்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________.

**A) பொய் + அகற்றும்**

B) பொய் + கற்றும்

C) பொய்ய + கற்றும்

D) பொய் + யகற்றும்

winmeen.com